இந்து தமிழ் திசை
உண்மை நின்றிட வேண்டும்
புதன், மார்ச் 25, 2020


# ரஞ்சன் கோகோய்க்கு எம்.பி. பதவி: நேர்மையற்ற செயல்

உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாகப் பதவி வகித்து ஓய்வுபெற்ற ரஞ்சன் கோகோய், மாநிலங்களவை நியமன உறுப்பினராக நியமிக்கப்பட்டதும், அதை ஏற்றுக்கொண்டதும் அவர் வகித்த பதவிக்குப் பெருமை சேர்ப்பதல்ல; மாறாக, கண்ணியத்தைக் குலைப்பதாகும். மிகச் சிறந்த சட்ட வல்லுநருக்கான கௌரவமாக இது தோன்றாது; தலைமை நீதிபதியாகப் பதவி வகித்தபோது ஆளும் கூட்டணிக்கு ஆதரவாகச் செயல்பட்டதற்கு வழங்கப்பட்ட பரிசாகவே இந்த நியமனம் பார்க்கப்படும். உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாகப் பதவி வகித்து ஓய்வுபெற்ற நான்கு மாதங்களுக்கெல்லாம் இந்த நியமனம் நடந்துள்ளது. ஆளும் கூட்டணிக்குச் சாதகமாக அளித்த தீர்ப்புகளுக்காகவும், சில வழக்குகளைத் தாமதப்படுத்தியதற்காகவும் இந்த நியமனம் என்று சிலருக்குத் தோன்றினால் அதைத் தவறு என்று எப்படிக் கூற முடியும்?

நீதித் துறைக்கும் சட்டத் துறைக்கும் இடையில் மோதல் இல்லாமல் சுமுகமாக ஒருங்கிணைந்து செயல்படவே இந்த நியமனம் என்று சிலர் கூறுவதையும் ஏற்பதற்கில்லை. ஓய்வுபெற்ற பிறகு நீதித் துறைக்கு அவர் பிரதிநிதியும் இல்லை. அவரை அந்தப் பணிக்காக நீதித் துறைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. மாநிலங்களவையில் விவாதம் நடக்கும்போது அவருடைய சட்ட அறிவும், நீதிபதியாகப் பணியாற்றிய அவருடைய அனுபவங்களும் வெளிப்படும் என்பதை மட்டுமே ஏற்கலாம்.

அயோத்தி வழக்கிலும், ரஃபேல் விமான பேரம் தொடர்பான வழக்கிலும் ஆளுங்கட்சிக்கு ஆதரவாகத் தீர்ப்பு வழங்கியிருந்தார். எனவே, தார்மீக அடிப்படையில் இந்த நியமனத்தை கோகோயே ஏற்க மறுத்திருக்க வேண்டும். தேர்தல் நன்கொடைப் பத்திரம் தொடர்பான வழக்கையும், காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்தை அளிக்கும் சட்டத்தை நீக்கியது தொடர்பான வழக்கையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் தாமதப்படுத்திய அவருடைய நிர்வாக முடிவுகளும் ஆளுங்கட்சிக்கு சாதகமாகத்தான் அமைந்தன. நியமன உறுப்பினர் பதவியை ஏற்றுக்கொண்டிருப்பதால் அவருடைய முந்தைய செயல்கள் அனைத்துக்கும் ஒரு சாயம் ஏறுவதைத் தடுக்க முடியாது. 'ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிகள் மாநிலங்களவைக்கு இதற்கு முன்னாலும் நியமிக்கப்பட்டுள்ளனர், அவர்கள் ஆளுநர்களாகக்கூட பதவி வகித்துள்ளனர்' என்று ஆளுங்கட்சி தரப்பில் கூறப்படுகிறது. அது இந்த நியமனத்தை நியாயப்படுத்திவிடாது. 'இது முறையற்ற செயல்தான்' என்பதை அவர்களே மறைமுகமாக ஒப்புக்கொள்வதைப் போல் ஆகிறது.

1984-ல் டெல்லியிலும் பிற நகரங்களிலும் சீக்கியர்களுக்கு எதிராக நடந்த வன்முறைகளுக்கு காங்கிரஸ் கட்சியை அமைப்பு ரீதியாக எந்த விதத்திலும் பொறுப்பாக்க முடியாது என்று அளித்த தீர்ப்புக்குப் பரிசாகத்தான் நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா மாநிலங்களவை உறுப்பினராக்கப்பட்டார் என்ற குற்றச்சாட்டு இன்னும் உயிரோடு உள்ளது. பிஹாரில் நிதி முறைகேட்டில் காங்கிரஸ் முதலமைச்சர் சம்பந்தப்படவில்லை என்று அளித்த தீர்ப்புக்காக நீதிபதி பஹருல் இஸ்லாம் மாநிலங்களவை உறுப்பினராக்கப்பட்டார், அதே பதவியை 1972-ல் ராஜிநாமா செய்துவிட்டு உயர் நீதிமன்ற நீதிபதியானார்; 1983-ல் அவரே உச்ச நீதிமன்ற நீதிபதி பதவியை விட்டு விலகி தேர்தலிலும் போட்டியிட்டார் என்பதும் அப்படித்தான். இந்த முன்னுதாரணங்கள் நல்லவை, உடனே பின்பற்றத்தக்கவை என்று ஆளுங்கட்சியும் அதன் தலைவர்களும் கருதுகின்றனரா?



# இணையவெளியில் தமிழாய்வுகள்: அனைத்துலக கவனம் பெற என்ன செய்ய வேண்டும்?

சு.லட்சுமணன், ந.முருகேசபாண்டியன்

தமிழாய்வு என்பது தமிழ் இலக்கியம், இலக்கணம் மட்டுமின்றி மொழியியல், இனவரைவியல், தொல்லியல், நாடகவியல், வரலாறு, நுண்கலைகள், தகவல் தொடர்பியல், இதழியல், சூழலியல், பெண்ணியம், சமயம், மெய்யியல் போன்ற பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்த நிலையில் விரிவடைந்துள்ளது. உயர்கல்விப் புலத்தில் பேராசிரியர்களும் முனைவர் பட்ட ஆய்வாளர்களும் தமிழாய்வு தொடர்பாக ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கில் ஆய்வுக் கட்டுரைகளைக் கருத்தரங்குகளில் சமர்ப்பிக்கின்றனர். இன்னொருபுறம், காத்திரமான ஆய்வுக் கட்டுரைகளை ஆய்விதழ்களில் வெளியிடும் போக்கு அதிகரித்துவருகிறது. தமிழகம் மட்டுமின்றி இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிஷியஸ் போன்ற நாடுகளில் இருந்தும் ஆய்வாளர்களால் தமிழில் ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்படுகின்றன.

அச்சு ஊடகம், மின்னணு ஊடகம் மூலம் ஆய்விதழ்களில் பிரசுரமாகிற தமிழாய்வுக் கட்டுரைகள்தான் கல்விப்புலம் சார்ந்த அண்மைக் கால ஆய்வுப் போக்குகளைத் தீர்மானிக்கின்றன. மின்-ஆய்விதழ்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் சூழலில் ஆய்வுக் கட்டுரைகள் குறித்த கண்காணிப்பும் தர மதிப்பீடும் இணையவெளியில் முக்கிய இடம்பெறுகின்றன. தகவல் பெருக்கச் சூழலில் தமிழாய்வுக் கட்டுரைகளை அடையாளப்படுத்திட நவீனத் தொழில்நுட்பம் சார்ந்த அமைப்புகளைப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தமிழில் நடைபெறுகிற ஆய்வுகளும், பிரசுரிக்கப்படுகிற ஆராய்ச்சிக் கட்டுரைகளும் சர்வதேசத் தரத்துக்கேற்பத் தகவமைக்கப்பட வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

**ஆய்வுசார் குறியீடுகள்**

ஒரு ஆய்வாளர் தான் தேர்ந்தெடுத்துள்ள ஆய்வுத் தலைப்பு தொடர்பாக முன்னர் பிரசுரமாகியுள்ள ஆய்வுக் கட்டுரைகளையும் ஆய்வுகளின் போக்கையும் அறிந்துகொள்வது மிகவும் அவசியம். தமிழாய்வுகள் நெடிய பாரம்பரியமும் வரலாறும் மிக்கவை எனினும் ஆய்வுக் கட்டுரைகளை ஆவணப்படுத்துதல் என்பது தொடக்க நிலையில்தான் உள்ளது அல்லது நடைபெறாமலே உள்ளது. இதனால், பிற துறைகளில் ஆய்வுக் கட்டுரைகளுக்கு அளிக்கப்படும் ஆய்வுசார் குறியீடுகளான மேற்கோள் அளவீடுகள் (Citation Metrics, H-index, i-10 index, SNIP) தமிழாராய்ச்சித் துறையில் வழங்கப்படாமல் இருக்கிற சூழல் நிலவுகிறது.

ஆய்விதழில் பிரசுரமாகிற ஆய்வுக்கட்டுரைகள், சர்வதேசக் கட்டுரை எண் (DOI number) பெறுவதன் மூலம், அவை 'வேர்ல்ட்கேட்' (WorldCat), 'ப்ளம்எக்ஸ்' (PlumX), 'பிகேபி இண்டெக்ஸ்' (PKP Index), 'கிராஸ்ரெஃப்' (Crossref) போன்ற அறிவியல் தரவுத் தளங்களில் பதிவேற்றப்படுகின்றன. அறிவியல், சமூக அறிவியல், கலையியல் சார்ந்த ஆய்வுகளில் ஆய்விதழ்களின் தரமும், ஆய்வாளர்களின் தனித்துவமும், ஆய்விதழ்களில் பிரசுரமாகிய ஆய்வுக் கட்டுரைகளின் தர மதிப்பீட்டின் அடிப்படையில்தான் நிர்ணயிக்கப்படுகின்றன. இது தொடர்பாக 'ஸ்கோப்பஸ்' (SCOPUS), 'வெஃப் ஆப் சயின்ஸ்' (WoS) போன்ற அமைப்புகள், ஆய்விதழ்களின் தரத்தை மதிப்பிடுகிற பணியைத் தொடர்ந்து செய்கின்றன.

**என்னென்ன தேவை?**

தமிழாய்வுக் கட்டுரைகள் தொடர்பாகச் செயல்முறைத் திட்டங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்திட, தமிழாய்வுசார் குறியீடுகளை (Citation Metrics) உருவாக்கி மேம்படுத்த வேண்டும். எனவே, ஆய்வுக் கட்டுரை எழுதவிருக்கிற ஆராய்ச்சியாளர்கள்/ கல்வியாளர்கள்/ கட்டுரையாளர்கள் கூகுள் ஆய்வாளர் கணக்கு (Google Scholar account), ஆய்வு நுழைவாயில் கணக்கு (Research Gate account), ஆய்வாளர் அடையாளம் (Researcher ID), அடிப்படைத் தரவுகள் ஆகியவற்றைப் பற்றி அறிந்து அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

கூகுள் ஆய்வாளர் கணக்கு, கூகுள் நிறுவனத்தினரால் ஆராய்ச்சியாளர்களுக்கு இலவசமாகத் தரப்படுகிற சேவை. இந்தக் கணக்கை ஏற்படுத்தி நிர்வகிப்பதற்குக் குறைந்தபட்சம் ஆய்வாளர் அல்லது கட்டுரையாளருக்கு ஜிமெயில் கணக்கு இருந்தால் போதுமானது. இதை 'www.scholar.google.com' என்ற இணையத்தளத்தில் எளிதில் உருவாக்கி ஆய்வாளர் இதுவரை வெளியிட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் பதிவேற்ற முடியும். கூகுள் தேடுபொறியின் உதவியுடன் கட்டுரையாளர் பெற்றிருக்கக்கூடிய அனைத்து வகையான ஆய்வுசார் குறியீடுகளையும் அறிக்கையாகப் பெறும் வாய்ப்பு இங்குள்ளது.

கல்விப்புலம் சார்ந்த பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் குறைந்தபட்சம் கல்வி நிறுவனத்திலிருந்து வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டையின் மூலம் தங்களுக்கெனத் தனிப்பட்ட ஆய்வு நுழைவாயில் கணக்கை (Research Gate account) ஏற்படுத்தி, தாங்கள் இதுவரை வெளியிட்டுள்ள அல்லது புதிதாக எழுதியுள்ள கட்டுரைகளைப் பதிவேற்றலாம். இணையத்தில் ஆய்வாளரின் கட்டுரைகளை எத்தனை பேர் பார்த்திருக்கிறார்கள், பதிவிறக்கம் செய்திருக்கிறார்கள், ஆய்வாளருக்குக் கிடைத்திருக்கிற மேற்கோள் அளவீடுகள் (RG Factor) ஆகியவற்றை அறிந்துகொள்கிற வாய்ப்பு ஆய்வு நுழைவாயிலில் இருக்கிறது.

'ஆய்வாளர் அடையாளம்' (Researcher ID) என அழைக்கப்படும் 'ஆர்ச்சிட் ரிசர்ச்சர் ஐடி' (ORCID Researcher ID – Clarivate Analytics) எண், ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிற அனைத்து வகையான ஆய்வுத் துறையினருக்கும் இந்த எண் மிகவும் அவசியமானது. இந்த எண்ணை 'கல்வி ஆதார்' என்று கூறலாம். இணையத்தில் இந்த எண்ணை ஏற்படுத்திப் பயன்படுத்துவது முற்றிலும் இலவசம். தமிழ் ஆய்வாளர்களும் பேராசிரியர்களும் அவசியம் தங்களுக்கான அடையாள எண்ணை உருவாக்கிட வேண்டும்.

**அனைத்துலக முறைமைகள்**

தமிழில் பிரசுரமாகிற எந்தவொரு ஆய்வுக் கட்டுரையும், ஆய்வுச் சுருக்கம், முதன்மைச் சொற்கள், துணைநூல் பட்டியல் ஆகிய அடிப்படைத் தரவுகளை உள்ளடக்கியதாக இருத்தல் அவசியம். தமிழில் எழுதப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரையுடன் ஆய்வுச் சுருக்கம், முதன்மைச் சொற்கள், துணைநூல் பட்டியல் ஆகியவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் சேர்த்துப் பதிவேற்றினால் கூகுள் ஆய்வாளர் கணக்கு, ஆய்வு நுழைவாயில் கணக்கில் ஆய்வாளரின் கட்டுரைகள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. ஆய்வுக் கட்டுரையின் இறுதியில் துணைநூல் பட்டியல் அளிக்கும்போது 'எம்எல்ஏ ஸ்டைல்' (MLA Style), 'ஏபிஏ ஸ்டைல்' (APA Style), 'சிகாகோ ஸ்டைல் மேனுவல்' (Chicago Style Manual) போன்ற அனைத்துலக முறைமைகளைப் பயன்படுத்துவது அவசியமானது.

ஆய்வின் தாக்கத்தை அறிவியல்பூர்வமாகத் தருவதுதான் ஆய்வுசார் குறியீடுகள் (Citation Metrics). ஆய்வுக் கட்டுரையில் பயன்படுகிற அதிக எண்ணிக்கையிலான மேற்கோள்கள் கட்டுரையை எழுதிய ஆராய்ச்சியாளரின் ஆய்வுசார் குறியீட்டை நிர்ணயிக்கின்றன. கூகுள் தரும் பல சேவைகளைப் போல ஆய்வுசார் குறியீடுகளைப் பெற்றிட கூகுள் ஆய்வாளர் கணக்கு என்ற சேவை உதவுகிறது.

தமிழில் எழுதப்படுகிற ஆய்வுக் கட்டுரைகள் உடனடியாக மின்னணு வெளியில் அதிக எண்ணிக்கையில் இடம்பெறும்போது அவை அண்மைக்கால மதிப்பீட்டைப் பெறும். தமிழில் நடைபெறுகிற ஆய்வுகள் குறித்து, அனைத்துலக அளவில் கவனப்படுத்திட ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் நவீன அறிவியல் தொழில்நுட்பத்துடன் இணைந்து செயலாற்றிட வேண்டியுள்ளது.

> தமிழில் எழுதப்படுகிற ஆய்வுக் கட்டுரைகள் உடனடியாக மின்னணு வெளியில் அதிக எண்ணிக்கையில் இடம்பெறும்போது அவை அண்மைக்கால மதிப்பீட்டைப் பெறும். தமிழில் நடைபெறுகிற ஆய்வுகள் குறித்து, அனைத்துலக அளவில் கவனப்படுத்திட ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் நவீன அறிவியல் தொழில்நுட்பத்துடன் இணைந்து செயலாற்றிட வேண்டியுள்ளது!

- கட்டுரையாளர்கள்,
சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழின் முதன்மை ஆசிரியர் மற்றும் பதிப்பாளர்.

## இப்படிக்கு இவர்கள்




### முடக்க கால நடவடிக்கைகள்

கரோனா பாதிப்புகள் மாநிலங்களெங்கும் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றன. இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கைகளை மக்கள் விழிப்புணர்வுடன் நடைமுறைப்படுத்த வேண்டிய தருணம் இது. நாம் முடக்கப்படுவதால் சில சங்கடங்களை எதிர்கொள்ள நேரலாம். இருந்தாலும், ஒத்துழைப்பு தர வேண்டியது மிகவும் அவசியம். அத்தியாவசியப் பொருட்கள் தொடர்ந்து கிடைக்க வழிவகை செய்வது, அத்தியாவசியமான வங்கிச் சேவைகள், ஏடிஎம் சேவைகள், மருத்துவ வசதிகள் தொடர்ந்து கிடைக்கச் செய்வது, வணிகர்கள் இக்காலத்தில் விலைகளைக் கண்டபடி உயர்த்தாமல் நியாயமான விலைகளில் பொருட்களை வழங்குவது போன்றவற்றில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மெட்ரோ ரயில் போன்ற நகர்ப்புறப் போக்குவரத்துகள் முற்றிலும் நிறுத்தப்படுவதால், பணியாளர்கள் நெடுந்தூரம் பயணிப்பதில் உள்ள சிக்கல்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். அந்தந்த நிறுவனங்கள் அவர்களுக்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அவரவர் வீடுகளுக்கு அருகிலுள்ள கிளைகளுக்குத் தற்காலிகப் பணிமாற்றம் செய்து தர வாய்ப்பிருந்தால் நிர்வாகத்தினர் அதைக் கவனிக்க வேண்டும். கூட்டு ஒத்துழைப்பின் வழியாகவே இந்தப் பேராபத்தை எதிர்கொள்ள முடியும். பிற நாடுகளின் அனுபவங்களை நம்முடைய பாடமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

- கு.மா.பா. திருநாவுக்கரசு, சென்னை.


இணையத்திலும் இந்து தமிழுடன் இணைந்திருக்க...
www.hindutamil.in

சமூக வலைதளங்களில் எங்களைத் தொடர...
facebook.com/TamilTheHindu/
twitter.com/tamilthehindu
Youtube.com/tamilthehindu



இந்தியாவில் நிறைய ஆய்வகங்கள் இப்போது அதிக அளவில் மாதிரிகள் எடுக்க ஆரம்பித்திருக்கின்றன. நிலைமை தீவிரமடைவதைப் பொறுத்து சிறப்பான பரிசோதனை உத்திகளை வகுக்க வேண்டும். அதிக அளவில் பாதிப்புகளை எதிர்கொள்ளும் நாடுகளுக்கு உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைப்பது இதைத்தான்: கண்டறிதல், சோதனை செய்தல், சிகிச்சையளித்தல், தனிமைப்படுத்துதல், பாதிக்கப்பட்டவர்களோடு தொடர்புடையவர்களை அடையாளம் காணுதல். சோதனை செய்வதும் தனிமைப்படுத்துவதும் கரோனா தொற்றை எதிர்கொள்வதற்கு மிகவும் அவசியமானது.

- பூனம் கேத்ரிபால் சிங்,
தென்கிழக்கு ஆசிய இயக்குநர், உலக சுகாதார நிறுவனம்.



**181** பருவநிலை மாற்றத்தால் பாதிப்பை எதிர்கொள்ளவிருக்கும் நாடுகளின் எண்ணிக்கை. மிக அதிக அளவில் பாதிப்பை எதிர்கொள்ளும் நாடுகளில் இந்தியாவுக்கு ஐந்தாம் இடம்.

நடுப் பக்கங்களுக்குக் கட்டுரைகளை அனுப்புவோர் editpage@hindutamil.co.in என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும். படைப்புகளை அஞ்சலில் அனுப்புவோர் பிரதி எடுத்துக்கொண்டு அனுப்பவும்; பிரசுரமாகாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது. பத்திரிகையில் வெளியாகும் கட்டுரையாளர்கள் / பேட்டியாளர்களின் கருத்துகள் அவர்களுடைய சொந்தக் கருத்துகளே. அவை எந்த வகையிலும் இப்பத்திரிகையின் கருத்து ஆகாது.

வாசகர்களின் சூடான, சுவையான கருத்துகள், விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்கள் உடனடியாக எங்களை வந்தடைய feedback@hindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ, 044-28552215 என்ற தொலைநகலுக்கோ அனுப்புங்கள். அஞ்சல் மூலம் கடிதம் அனுப்ப: ஆசிரியர் இலாகா, இந்து தமிழ், கஸ்தூரி மையம், 124, வாலாஜா சாலை, சென்னை - 2.